## ப்ரெஸ்டோ(PRESTO)வை எப்படி உபயோகிப்பது?

ப்ரெஸ்டோ (PRESTO) என்பது ஒரு மின்னணு ரீதியானபணம் செலுத்தும் அமைப்பு, இது கிரேட்டர் டோரோன்ட்டோ (Greater Toronto), ஹாமில்ட்டன் (Hamilton) பகுதி (GTHA) மற்றும் ஒட்டாவா ஆகியவை ஊடாக இயங்குகின்ற பேருந்து வசதிகளில் உபயோகமாகிறது. பயணிகளுக்கு மிகவும் வசதியாக பணம் செலுத்தும் முறையாக இருக்கின்ற ப்ரெஸ்டோ (PRESTO) ஆனது, ஸ்மார்ட் கார்டு தொழில்நுட்பத்தை உபயோகிக்கிறது.

1. ஒரு கார்டு வாங்கவும்

ஒரு ப்ரெஸ்டோ (PRESTO) கார்டை PRESTOcard.ca வலைத்தளம் வழியாக ஆன்லைனிலோ அல்லது பின் வரும் ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து முனையங்கள் அல்லது வசதியமைப்புக்களிலோ வாங்கவும் :

- **Brampton Gateway Terminal** மெயின் வீதி தெற்கு
- **Bramalea Terminal** 160 சென்ட்ரல் பார்க் ட்ரைவ்
- **Clark Facility** 160 சென்ட்ரல் பார்க் ட்ரைவ்
- Downtown Terminal 8 நெல்சன்வீதி 501
- Sandalwood Facility 130 சாண்டல்வுட் பார்க்வே மேற்கு
- Trinity Common Terminal 164 Great Lakes Boulevard

தேர்ந்தெடுக்கப்பட்ட ஷாப்பர்ஸ் ட்ரக் மார்ட் (Shoppers Drug Mart) கடைகளில் ப்ரெஸ்டோ (PRESTO) கார்டுகள் கிடைக்கின்றன; நீங்கள் கார்டினை வாங்கி, அதில் பணம் சேர்த்துக்கொள்ளலாம் அல்லது ப்ராம்ப்டன் ( Brampton) பேருந்து வசதிக்கான மாதாந்திர அல்லது வாராந்திர அனுமதிச் சீட்டுகள் பெற்று கட்டண வகையை அமைக்கலாம். அமைவிடங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு prestocard.ca/shoppersdrugmart.க்கு வருகை தரவும்

கார்டு வாங்கும்போது திருப்பித்தர இயலாத சேவைக் கட்டணமாக $6 வசூலிக்கப்படும்.

2. உங்கள் கார்டில் பணம் போடவும்-

ப்ரெஸ்டோ (PRESTO) கொண்டு, உங்கள் கார்டில் பலவகையான விதத்தில் பணம் போடும் வசதி உங்களுக்குக் கிடைக்கிறது. ப்ரெஸ்டோ ( PRESTO) வில் இரண்டு வகைகளில் பணம் சேர்க்கலாம்:

- பணம் போடுதல் (கார்டில் இருப்பு வைத்தல்): உங்கள் ப்ரெஸ்டோ (PRESTO) கார்டில் குறைந்தது $10 இருப்பு சேர்க்கவும். அதிகபட்சமாக $1000 இருப்பு வைத்துக்கொள்ளலாம். நீங்கள் பயணம் செய்யும்போது உங்கள் பயணத்திற்கான கட்டணம் உங்கள் கார்டில் மீதமிருக்கும் இருப்புத்தொகையில் இருந்து கழித்துக் கொள்ளப்படும்.
- மாதாந்திர/வாராந்திர அனுமதிச் சீட்டு பெறவும்: மாதாந்திர அல்லது வாராந்திர அனுமதிச் சீட்டினைக் கொண்டு பல எண்ணிக்கையிலான பயணங்களை அனுமதிச் சீட்டு காலாவதியாகும் வரை மேற்கொள்ளலாம்.

3. மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு ஒன்றைத் துவக்கவும்

நீங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு ஒன்றைத் துவக்க விரும்பினால், ஒரு ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து முனையம் அல்லது அலுவலகத்திலிருந்து உங்கள் கார்டினை வாங்கியதில் இருந்து 24 மணி நேரம் காத்திருக்கவும்.

- PRESTOcard.ca.வலைத்தளத்திலும் உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கினை ஆன்லைனில் உருவாக்கலாம்.
- உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கினை உருவாக்கிய 24 மணி நேரத்திற்குப் பின்னர், அதன் கணக்குசெய்முறையை செயலாக்கம் செய்வதற்காக எந்த ஒரு ப்ரெஸ்டோ (PRESTO)-ஏதுவாக்கப்பட சாதனத்திலாவது* 30 நாட்களுக்குள்ளாக அதனைத் தட்ட வேண்டும். 30 நாட்களுக்குப் பின்னர் உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு காலாவதியாகிவிடும். உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு காலாவதியானால், அதனை மறு செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு 1-8-PRESTO-123 (1-877-378-6123) என்ற எண்ணை அழைக்கவும்.

* ப்ரெஸ்டோ (PRESTO)-ஏதுவாக்கப்பட்ட சாதனங்களில் அடங்குபவை:

- ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து முனையங்கள் மற்றும் அலுவலகங்களில் நிலுவைத்தொகை சரிபார்க்கும்சாதனங்கள்
- ப்ரமலியா (Bramalea) முனையம், டவுண்டவுன் (Downtown) முனையம் மற்றும் மவுண்ட் ப்ளசெண்ட் (Mount Pleasant) GO நிலையத்தில் இருக்கும் பயணச்சீட்டு வழங்கும் எந்திரங்கள்
- ப்ராம்ப்டன் (Brampton) பேருந்துகளில் பயணக்கட்டணம் செலுத்தக்கூடிய சாதனங்கள்

உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கினை செயலாக்கம் செய்வது என்பது உங்கள் பயணத்தின் அங்கமாக இருந்தால், பயணக்கட்டம் செலுத்தக்கூடிய சாதனங்களில் மட்டுமே உபயோகிக்கவும், ஏனெனில் இதனை சாதனத்தில் காட்டும்போது உங்கள் பயணத்திற்கான கட்டணத்தை இது கழித்துக்கொள்ளும். மாறாக, நீங்கள் பயணம் மேற்கொள்ளாத வேளையில் உங்கள் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கினை செயலாக்கம் செய்வதற்கு நிலுவைத்தொகை சரிபார்க்கும் சாதனத்தை உபயோகிக்கலாம்.

குறிப்பு: நீங்கள் வயது வந்த ஒருவராக இருந்து, மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு துவக்க விரும்பவில்லையானால், உங்கள் கார்டு வயதுவந்தவருக்கான கார்டாகவே கணக்கு ஏதுமில்லாமல் இருந்துவிடும் (மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு துவக்குவதின் பலன்களைப் பார்க்கவும் ).

4. தள்ளுபடி கொடுக்கப்பட்ட கட்டணங்களை அமைத்துக்கொள்ளவும்

குழந்தை*, இளைஞர் மற்றும் முதியோர் ஆகிய வகைகளுக்காக - மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கினை நீங்கள் துவக்க பரிந்துரை செய்யப்பட்டாலும்கூட, கணக்கு இல்லாமலேயே குழந்தை, இளைஞர் அல்லது முதியோருக்கான சலுகைக் கட்டணங்களை அமைத்துக்கொள்ளலாம். ப்ராம்ப்டன் (Brampton) பேருந்து முனையம் அல்லது அலுவலகத்தில் வாங்கும்போதே தள்ளுபடி செய்யப்பட்ட கட்டணத்தை நேரடியாக அமைத்துக்கொள்ளலாம்.

*ஒரு குழந்தை ப்ரெஸ்டோ (PRESTO) கார்டு உபயோகித்து வந்தால், குழந்தையின் 13 ஆவது பிறந்த நாளின்போது, கார்டில் இருக்கும் கட்டண வகையானது

PRESTO

தன்னியக்கமாகவே குழந்தையிலிருந்து வயதுவந்தோர் என மாறிக்கொள்கிறது. 13-19 வயதினருக்கு இளைஞர் வகைக் கட்டணம் பொருந்தும்; அதனை இளைஞர் வகைக்கு அமைக்க ப்ராம்ப்டன் (Brampton) முனையம் அல்லது அலுவலகத்திற்கு செல்லவும்.

கூடுதல் பயணிகளுக்கும் சேர்த்து பணம் செலுத்தவும் உங்கள் ப்ரெஸ்டோ (PRESTO) கார்டை உபயோகிக்கலாம்

- கட்டணம் செலுத்த உபயோகிக்கும் சாதனத்தில் உங்கள் ப்ரெஸ்டோ (PRESTO) கார்டைத் தட்டியபின்னர், கூடுதல் பயணிகளுக்கும் சேர்த்து பணம் செலுத்துவது பற்றி இயக்குபவரிடம் கூறவும். இயக்குபவர் கூடுதல் பயணிகளை உள்ளீடு செய்து அவர்களுக்கான கட்டணங்களைக் கழித்துக்கொள்வதற்காக உங்கள் கார்டை இயக்குபவரின் ப்ரெஸ்டோ சாதனத்தில் தட்டுமாறு கூறுவார்.

குறிப்பு: கூடுதல் பயணிகளுக்கு வயது வந்தவர்களுக்கான பயணக்கட்டணம் விதிக்கப்படும்.

## மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கை உருவாக்குவதன்

மை ப்ரெஸ்டோ (My PRESTO)கணக்கை உருவாக்குவதன் மூலம் நீங்கள் செய்ய இயல்வது:

- உங்கள் கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருட்டுப்போனாலோ உங்கள் நிலுவைத்தொகையை பாதுக்காக்கலாம். உங்கள் கார்டை நிராகரித்துவிட்டு, புதிதாக மாற்றிக்கொண்ட கார்டுக்கு நிலுவைத்தொகையை கொண்டு செல்லலாம்.
  - தவறவிட்ட கார்டு பற்றி ப்ரெஸ்டோ (PRESTO) வுக்கு தெரிவித்து, அதனை செயலிழக்கச் செய்துவிடலாம். தவறவிட்டது பற்றி தெரியப்படுத்தியதில் இருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக செலவாகும் தொகைகு நீங்கள்தான் பொறுப்பு. நீங்கள் மாற்றுக் கார்டு வாங்கி குறைந்தபட்சமாக $10 பணம் செலுத்த வேண்டும். உங்கள் புதிய கார்டில் மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கு ஒன்றை உருவாக்கிவிட வேண்டாம். கார்டை நிராகரித்துவிட்டு, புதிய கார்டு பெற்ற பின்னர் 24 மணி நேரம் கழித்து, உங்கள்பழைய கார்டில் மீதமிருந்த தொகையை புதிய கார்டுக்கு மாற்ற, ஆன்லைனுக்கு செல்லவும் அல்லது ப்ரெஸ்டோ (PRESTO) அழைப்பு மையத்தை 1-8-PRESTO-123 (1-877-378-6123) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் கார்டில் பணம் சேர்ப்பதற்கு தன்னியக்கமாக பணம் சேர்த்தல் அல்லது தன்னியக்கமாக புதுப்பித்தலை அமைப்பு செய்யவும்.

- தன்னியக்கமாக பணம் சேர்த்தல் என்பது, நீங்கள் அமைத்து வைத்த குறிப்பிட்ட டாலர் மதிப்புக்கும் கீழாக உங்கள் இருப்புத்தொகை வரும்போது உங்கள் வங்கிக் கணக்கு அல்லது கிரெடிட் கார்டிலிருந்து PRESTO கார்டு தன்னியக்கமாக பணம் சேர்த்துக்கொள்ளும்.
- இந்த டாலர் தொகையானது $5 and $60க்கு இடையிலானதொகையாக இருக்க வேண்டும். தன்னியக்கமாக நீங்கள் சேர்க்கவிருக்கும் குறைந்த பட்சத் தொகை $20 ஆகும் மற்றும் அதிகபட்சத் தொகையானது $980 ஆகும்.

**குறிப்பு**: குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகைகள் ப்ரெஸ்டோ (PRESTO) வினால் அறிவிப்பு இன்றி செய்யப்படும் மாறுதலுக்கு உட்பட்டவை. உங்களுடைய புதிய இருப்புத்தொகை உடனடியாக உங்கள் கார்டில் காட்டப்படும்.

- உங்கள் பரிவர்த்தனைகளைப் பற்றிய முழுவிபரத்தை மீள்பார்வையிடவும்.
  - உங்கள் இருப்புத்தொகையின் நிலை அறியவும் மற்றும் நீங்கள் உபயோகித்த விபரமும் தெரிந்துகொள்ளவும்.
- அவசரநிலைப் பயணம்
  - கார்டில் போதுமான பணம் இல்லாமல் இருக்கும் வாடிக்கையாளர்கள், கார்டைத் தட்டி, ஒரு தடவைக்கான பயணம் செய்வதற்கு தகுதி கொண்டிருக்கிறார்கள், கொடுக்கப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு மணி நேரம் உபயோகித்துக்கொள்ளலாம்.

கார்டில் இருப்புத்தொகை எதிர்மறையாகக் காட்டும், உங்கள் கார்டுக்கு பணம் சேர்த்த பின்னர் அடுத்தமுறையில் இது தன்னியக்கமாகவே சரியாகிவிடும். எதிர்மறை நிலுவைத்தொகைக்கான கட்டணமாக $0.25 தொகை அடுத்த பணம் சேர்த்தலின்போது கழித்துக்கொள்ளப்படும்.

முக்கியமான குறிப்பு: உங்கள் கார்டை நீங்கள் நிராகரித்தபின்னர், மாற்றாக ஒரு ப்ரெஸ்டோ PRESTO கார்டினை நீங்கள் ஆன்லைனில் பெறலாம் அல்லது நேரடியாக ஒரு புதிய கார்டை $6 செலுத்தி (கார்டு நிலுவைத்தொகையில் குறைந்தபட்சம் $10 சேர்க்கப்படவேண்டும்) பெற்றுக்கொண்டு, உங்கள் நடப்பு நிலுவைத்தொகையை புதிய கார்டுக்கு மாற்றிக்கொள்ளலாம்.

உங்களுடைய புதிய PRESTO கார்டுக்கு புதிய ஒரு மை ப்ரெஸ்டோ (My PRESTO) கணக்கை உருவாக்கிவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியம்; இது மாற்றம் செய்யப்படும் செய்முறையில் தன்னியக்கமாகவே செய்யப்பட்டுவிடும்.

## ப்ரெஸ்டோ PRESTOவை தொடர்பு கொள்ளவும்

தொலைபேசி: 1-8-PRESTO-123 (1-877-378-6123)

ஆன்லைன்: PRESTOcard.ca

